**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 144/2023**

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07-ம் நாள் திங்கள் கிழமை DW1 -இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.07.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | முகமது ரஃபீக் (DW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

<u>சாட்சி நீதிமன்றம் மூலம் அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் திருக்கலாச்சேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். வாதி முதல் பிரதிவாதியை தெரியும். அவர்களுக்கு இடையே 10 ஆண்டுகளுக்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது. நான் திருக்கலாச்சேரி ஜமாத் தலைவர் தற்போதும் நான் தான் தலைவர். 30.01.2016 அன்று பொறையார் காவல் நிலையத்தில் வாதி முதல் பிரதிவாதி இடையே ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக நானும் காவல் நிலையம் சென்றிருந்தேன். காரைக்கால் ஜமாத்திலும் வந்திருந்தார்கள். போலிசார் காவல் நிலையம் வரவேண்டாம் ஜமாத்தில் பேசி அவர்களை சேர்த்து வையுங்கள் என்று சொன்னார்கள் ஆனால் அவர்கள் இருவரும் ஜமாத்திற்கு கட்டுப்படவில்லை. காவல் நிலையத்தில் பேசி வாதியிடம் இருந்து ஆவணத்தை வாங்கி ஆவணத்தை எங்களிடம் கொடுத்து சுமூகமாக பேசி தீர்த்துவைக்குமாறு சொன்னார்கள், எங்களுக்கு தரப்பினர்கள் கட்டுபடவில்லை என்பதால் அந்த ஆவணத்தை சர்புதியினிடம் திருப்பி கொடுத்துவிட்டோம். அது வீட்டு டாக்குமெண்ட் அசல் ஆவணம் தான்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.**